டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 27.11.2024 புதன்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 133- Madurai | Online Edition

# உருவாகிறது பெங்கல் புயல்!!

## 4 மாவட்டங்களுக்கு ஆரஞ்சு அலர்ட்!

சென்னை, நவ.26

வங்க கடலில் இன்று உருவாக உள்ள பெங்கல் புயல் காரணமாக 4 மாவட்டங்களுக்கு ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பூமத்திய ரேகையை ஒட்டிய கிழக்கு இந்திய பெருங்கடல் பகுதியில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, நேற்று முன்தினம் காலை 8.30 மணி அளவில், காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றது. மேலும் இது வலுவடைந்து ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறியுள்ளது. நாகைக்கு தெற்கு-தென் கிழக்கு பகுதியில் 630 கிலோ மீட்டர் தூரத்திலும், திரிகோணமலைக்கு தெற்கு-தென் கிழக்கில் 340 கிலோ மீட்டர் தூரத்திலும், புதுச்சேரியில் இருந்து 750 கிலோ மீட்டர் தெற்கு-தென்கிழக்கிலும் நிலை கொண்டுள்ளது. காற்றழுத்த தாழ்வு மண்டலம் 10 கிலோ மீட்டர் வேகத்தில் தமிழகத்தை நெருங்கி வருவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், வங்க கடலில் இன்று பெங்கல் புயல் உருவாக உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்க கடலில் உருவாகும் புயலுக்கு சவுதி அரேபியா பரிந்துரைத்த பெங்கல் என்ற பெயர் சூட்டப்படவுள்ளது. பெங்கல் புயல் இலங்கை கடற்கரை மற்றும் தமிழகத்தை நோக்கி நகரும் எனவும், சென்னை - புதுச்சேரி இடையே கரையை கடக்கும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதன் காரணமாக 4 மாவட்டங்களுக்கு ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் 3 நாட்களுக்கு மிக கன மழைக்கான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்

# வானிலை முன்னெச்சரிக்கை!

கோயம்புத்தூர், நவ.26

வங்காள விரிகுடாவின் தென்பகுதியில் ஏற்பட்டுள்ள மிகக் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமானது ஆழ்ந்த குறைந்த தாழ்வு மண்டலமாக மாற்றமடைந்து வடமேற்காக நகர்ந்து வருவதால் 27.11.24 (இன்று) காவிரி டெல்டா மண்டல மாவட்டங்களில் கன முதல் மிகக்கன மழை பொழிய வாய்ப்புள்ளது.

**வானிலை சார்ந்த வேளாண் அறிவுரை**

நெல் பயிர் பொதுவாக வளர் மற்றும் பூக்கும் பருவத்தில் உள்ளது.

● போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும். ஒரு வயலிலிருந்து அடுத்த வயல் வழியாக நீரினை வடிக்க வேண்டாம்.

● நீர்பாசனம், உரமிடல் மற்றும் மருந்துதெளிப்பினை ஒத்திவைக்கவும்.




● மழை நீரினை வடித்தவுடன் வரிசை நடவு செய்த வயல்களில் 'கோனோவீடர்' கருவி கொண்டு வேர் பகுதியில் காற்றோட்டம் ஏற்படுத்தவும்.

● மழை நின்றவுடன் நீரினை வடித்த பின் கூடுதலாக 25 சதவீத தழைச்சத்தினை இடுவதால் பயிர் விரைவில் நீர் தேங்கிய பாதிப்பிலிருந்து வெளிவரும்.

● மழை நீரினை வடித்தவுடன் நெற்பயிர்கள் நீர் தேங்குவதால் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து விடுபட்டு விரைவாக வளர்ச்சி பெற தமிழகவேளாண் பல்கலைக்கழகத்தின் 'ரைஸ் புளூம்' என்ற நெல்லிற்கான வளர்ச்சி யூக்கியினை இலை வழி

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

தெளிப்பாக ஏக்கருக்கு 2 கிலோ வீதம் 10 நாட்கள் இடை வெளியில் இருமுறை தெளிக்கவும்.

● ஒரு சில இடங்களில் தாமதமாக நடவு செய்யப்பட்ட குறுவை நெல் அறுவடை தருணத்தில் இருந்தால், மழையினால் பயிர் சாய்ந்து நெல் மணிகளின் முளைப்பினைத் தடுக்க 10 சத சோடியம் குளோரைடு (உப்பு) கரைசலைத் தெளிக்கவும்.

● மழை நின்றவுடன் நீரினை வடித்த பின் பூஞ்சாணத் தாக்குதலால் பயிர் அழுகல் தென்பட்டால் ஒரு ஏக்கருக்கு 200 மிலி புரபிகுனோசோல் மருந்தினைத் தெளிக்கவும்.

**காய்கறி பயிர்கள் – வளர் பருவத்தில் உள்ளது.**

● போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும்.

● மழை நின்றவுடன் 2.5 கிலோ டிரைகோடெர்மா விரிடியினை 50 கிலோ மணலுடன் கலந்து காய்கறி பயிர்களின் தூர் களுக்கிடையில் இடுவதனால் மண்ணிலிருந்து பரவக்கூடிய நோய்களைத் தவிர்க்கலாம்.

# கறவை மாடு வளர்ப்பு இலவசப் பயிற்சி

கரூர், நவ.26

கரூர் மாவட்டம், மண்மங்கலம் அருகில் பண்டுதகாரன்புதூரில் அமைந்துள்ள கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் 'கறவை மாடு வளர்ப்பு' பற்றிய ஒரு நாள் உள்வளாக பயிற்சி 28.11.24 (வியாழக்கிழமை) அன்று இலவசமாக அளிக்கப்படவுள்ளது.

விவசாயிகள் / கால்நடை பண்ணையாளர்கள் / கறவைமாடு வளர்ப்பில் ஆர்வம் உள்ள அனைவரும் கலந்து கொண்டு கறவை மாடு வளர்ப்பு தொடர்பாக தங்களுக்கு உள்ள சந்தேகங் களுக்கு தெளிவு பெற்று பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம். இந்த பயிற்சி பெற ஆர்வம் உள்ளோர் 04324 294335 மற்றும் 73390 57073 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளுமாறு மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் கேட்டுக் கொள்கிறார். மேலும் பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் பயிற்சி நாளான்று காலை 10.30 மணிக்கு எங்களது பயிற்சி மைய வளாகத்திற்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.



Rithvik Pipe®
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
CML-6400119610
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# வரும் 30க்குள் சம்பா நெல் காப்பீடு வேளாண்மை உதவி இயக்குநர் அறிவுறுத்தல்

மதுரை, நவ.26

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் வட்டார விவசாயிகள் பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் சம்பா பருவம் 2024-2025க்கு நடப்பு நவம்பர் மாதம் 30ம் தேதிக்குள் நெல் பயிருக்கு காப்பீடு செய்து விவசாயிகள் பயன்பெறலாம் என வேளாண்மை உதவி இயக்குநர் பெ.தெய்வேந்திரன் அறிவுறுத்தியுள்ளார்.

அலங்காநல்லூர் வட்டார விவசாயிகள் நடப்பு சம்பா பருவத்தில் நெல் நடவு பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றனர். வறட்சி, மழை வெள்ளம் மற்றும் பூச்சி தாக்குதல் உள்ளிட்ட எதிர்பாராத இயற்கை இடர்பாடுகள் நிகழும் சமயங்களில் விவசாயிகளை பாதுகாக்க பிரதம மந்திரி பயிர் காப்பீடுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. எனவே இழப்பீடு பெறும் வகையில் விவசாயிகள் பயிர் காப்பீடு செய்வது மிகவும் அவசியமாகும். அறிவிக்கை செய்யப்பட்ட வருவாய் கிராமங்கள் மற்றும் குறுவட்டங்களில் அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களை பயிரிடும் விவசாயிகள் மற்றும் குத்தகை விவசாயிகள் உட்பட காப்பீடு செய்திட தகுதியானவர்கள் ஆவர். எனவே வங்கிக்கடன் பெற்றுள்ள மற்றும் பயிர் கடன் பெறாத விவசாயிகள் தங்களின் விருப்பத்தின் பேரில் பயிர் காப்பீடு செய்யாதவர்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள், தேசிய மயமாக்கப்பட்ட வங்கி கிளைகள், பொது இசேவை மையங்களில் பயிர் காப்பீடு செய்யலாம்.

இதற்கு சாகுபடி செய்த நிலத்தின் அடங்கல், விண்ணப்பம் மற்றும் முன்மொழிவு படிவம், சிட்டா, பட்டா, வங்கி சேமிப்பு கணக்கு புத்தக முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் ஆவணங்களுடன் நெல் பயிருக்கு ஏக்கருக்கு ரூ.534 பிரீமியம் தொகையை செலுத்தி வரும் நவம்பர் 30-ஆம் தேதிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும் வேளாண்மை உதவி இயக்குநர், அலங்காநல்லூர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் — 26.11.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 25 | 30 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 25 | 30 | 57 | உருளை (பிற) | 30 | 38 |
| 1B | கத்திரி(Nadu) | 40 | 46 | 57A | உருளை(ஊட்டி) | 35 | 58 |
| 2 | வெண்டை | 45 | 50 | 58 | மேரக்காய் | 25 | 28 |
| 3 | தக்காளி (நாடு) | 26 | 30 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 35 | 40 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 22 | 26 | 60 | கேரட் | 68 | 72 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 65 | 70 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 60 | 68 |
| 6 | புடலை | 28 | 32 | 62 | நூல்கோல் | 45 | 48 |
| 7 | பீர்க்கன் | 40 | 46 | 63 | டர்னிப் | 45 | 48 |
| 8 | சுரைக்காய் | 25 | 28 | 64 | மு.கோஸ் | 25 | 30 |
| 9 | பாகற்காய் | 30 | 38 | 65 | மு.கோஸ்(கலர்) | 25 | 30 |
| 10 | கொத்தவரை | 40 | 44 | 66 | காளிபிளவர் | 40 | 43 |
| 11 | பூசணி | 12 | 14 | 67 | பட்டாணி | 100 | 120 |
| 12 | அரசாணி | 15 | 20 | 68 | பூண்டு | 260 | 332 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 25 | 30 | 69 | இஞ்சி | 48 | 100 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 25 | 28 | 70 | புருக்கோலின் | 170 | 180 |
| 15 | சி.வெங்காயம் | 50 | 54 | 71 | பென்னி பீன்ஸ் | 60 | 64 |
| 16 | பெ.வெங்காயம் | 50 | 57 | 72 | குடமிளகாய் | 42 | 46 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 30 | 36 | 73 | ஊட்டி அவரை | 150 | 160 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 60 | 74 | பஜ்ஜி மிளகாய் | 0 | 0 |
| 19 | முருங்கை | 0 | 0 | 71A | | | |
| 20 | தேங்காய் | 54 | 58 | | | | |
| 21 | மாங்காய் | 45 | 48 | | | | |
| 22 | வாழைக்காய் | 30 | 34 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 42 | 46 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 65 | 70 | 75 | எலுமிச்சை | 55 | 65 |
| 25 | சேப்பங்கிழங்கு | 45 | 50 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 60 |
| 26 | மரவள்ளி | 25 | 30 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 38 | 42 | 78 | பப்பாளி | 22 | 26 |
| 28 | கறிவேப்பிலை | 40 | 46 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 40 | 44 | 80 | திராட்சை | 50 | 60 |
| 30 | புதினா | 6 | 8 | 81 | மாம்பழம் | 0 | 0 |
| 31 | அகத்திக்கீரை | 20 | 22 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 200 |
| 32 | தண்டுக்கீரை | 20 | 22 | 83 | ஆரஞ்ச் | 40 | 65 |
| 33 | சுக்கிட்டி | 20 | 25 | 84 | சாத்துக்குடி | 70 | 80 |
| 34 | அரைக்கீரை | 20 | 22 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 20 | 22 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு &வெந்தயம் | 20 | 25 | 87 | முலாம்பழம் | 45 | 50 |
| 37 | பருப்புக்கீரை | 20 | 22 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 10 | 12 | 89 | | | |
| 39 | வல்லாரை | 10 | 12 | 90 | கதளி | 45 | 50 |
| 40 | கோவக்காய் | 30 | 36 | 91 | பூவன் | 35 | 40 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 35 | 40 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 25 | 28 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 20 | 24 | 96 | நேந்திரன் | 45 | 50 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 35 | 40 | 97 | செவ்வாழை | 65 | 70 |
| 47 | சுண்டக்காய் | 150 | 160 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 45 | 48 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 40 | 44 |
| 50 | நிலக்கடலை | 55 | 60 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 65 | 75 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 35 | 42 | | | | |
| 55A | துவரை | 55 | 60 | | | | |

# கால்நடைகள் விசம் தின்று விட்டால் சிகிச்சை அளிக்கும் முறைகள்

கால்நடைகள் பூச்சிக்கொல்லி, எலி மருந்து (வார்பெரின்), நத்தை கொல்லி (மெட்டால்டிகைடு), பூச்சிக்கொல்லி, பிளிச்சிங் பவுடர், வெள்ளை ஸ்பிரிட், நஞ்சு செடிகள் மற்றும் மருந்து வகைகள் ஆஸ்பரின் (பூனைக்கு ஒத்துக்கொள்ளாது) ஃபுனோ பார்பிட்டால் மற்றும் டையசிபாம் போன்ற மருந்துகளின் அளவு அதிகமாகும் போது கால்நடைகளுக்கு விசமாகிறது. கால்நடைகளில் மேற்கூறிய காரணத்தினால் விசத்தாக்கம் ஏற்பட்டு விட்டால், முறையான கீழ்க்கண்ட விபரங்களை சேகரிக்க வேண்டும்.

1. எப்பொழுது கால்நடை விசத்தை தின்றது?

2. எந்த வகையான விசம்?

3. எவ்வளவு விசத்தை தின்றது?

4. உண்மையிலேயே விசம் தின்றதா?

5. கால்நடைகளின் வகை, இனம் மற்றும் வயது போன்ற விபரங்கள் என்ன?

6. கால்நடைகளில் காணப்படும் நோய் அறிகுறிகள் என்ன? அதாவது வாந்தி, வயிற்றுப்போக்கு, சுறுசுறுப்பின்மை, நினை விழப்பு, வலிப்பு, தசை நடுக்கம், வயிற்று வலி, கோலை வடிதல் மற்றும் பெருமூச்சு விடுதல் போன்ற அறிகுறிகள் பொதுவாக காணப்படும்.

**சிகிச்சை முறைகள்**

1. விசப் பொருளை அகற்றிவிடவேண்டும். ஆக்ஸிஜன் கொடுக்கலாம். கால்நடைகளின் உடம்பில் விசப்பொருட்கள் ஒட்டி இருந்தால் கழுவிவிடலாம். மறுபடியும் விசப் பொருட்களை கால்நடைகள் தின்றுவிடாமல் இருக்க, அவற்றை பாதுகாப்பான இடத்தில் வைக்கவேண்டும்.

2. கால்நடைகளுக்கு எதானால் விசம் ஏற்பட்டுள்ளது என கண்டறிந்து, அதற்கு தகுந்த விச முறிவு மருந்தை கொடுக்க வேண்டும். உதாரணமாக வார்பெரின் விசத்தாக்குதலுக்கு வைட்டமின் கே கொடுத்தால் போதும்.

3. விசம் வயிறு மற்றும் குடல் பகுதியில் உறிஞ்சப்படாமல் தடுக்க கீழ்க்கண்ட சிகிச்சை முறைகளை கையாளலாம்.

**அ. வாந்தி எடுக்கவைக்க வேண்டும்**

இரண்டு கரண்டியளவு கடுகை ஒரு டம்ளர் வெதுவெதுப்பான தண்ணீருடன் சேர்த்து கொடுக்கலாம். அல்லது ஒன்று அல்லது இரண்டு துண்டு சலவை சோடாவை நாக்கிற்கு அடியில் வைக்க வேண்டும். இந்த சிகிச்சை முறைகளை பண்ணையாளரே செய்ய லாம். மேலும் உப்புக் கரைசலை ஒரு போதும் கொடுக்கக்கூடாது. ஏனெனில் அதுவே விசம் ஆகிவிடும். மேலும் கால்நடை மருத்துவர்கள் அபோமார்பின் 0.1 மி.கி / கிலோ எடை அடித்தோல்



ஊசி மூலம் கொடுக்கலாம் அல்லது ஜைலசின் 3.0 மி.கி / கிலோ எடை தசை ஊசி மூலம் கொடுக்கலாம்.

**ஆ. வயிற்றை கழுவி விடுதல்**

விசத்தை தின்று 4 மணி நேரத்திற்கு மேல் ஆகிவிட்டால், விசம் வயிறு மற்றும் குடல் பகுதியில் உறிஞ்சப்பட்டிருக்கும். அதனால் வயிற்றிலுள்ள பொருளை கழுவ வேண்டும். கால்நடைகளுக்கு மயக்க மருந்து கொடுத்து, வெதுவெதுப்பான தண்ணீர் அல்லது சலைனை இரப்பர் குழாய் மூலமாக வயிற்றுக்குள் செலுத்த வேண்டும். இதே போன்று திரும்ப திரும்ப, வடியும் தண்ணீர் தெளி வாக வரும் வரை செய்யவேண்டும். மரக்கரித்தூளை கொடுக்கலாம்.

**இ. பேதி எடுக்கவைத்தல்**

குடல் மற்றும் வயிற்றுப் பகுதியில் அரிப்பை ஏற்படுத்தும் விசத்தை கால்நடைகள் தின்று விட்டால், வயிற்றுப்போக்கை உண்டு பண்ணும் சிகிச்சை தரலாம்.

**ஈ. நோயை தனிக்கும் மருந்து கொடுத்தல்**

தின்ற விசப்பொருள் உணவுப்பாதையில் எரிச்சல் ஏற்படுத்தக் கூடியதாக இருந்தால், பச்சை முட்டையை பால் மற்றும் சர்க்கரை கலந்து அடித்து கொடுக்கவேண்டும். இவை உணவு பாதையின் மேல் சவ்வுகளை மூடி பாதுகாக்கும்.

**கால்நடைகளின் உடம்பில் ஒட்டியிருக்கும் விசப்பொருளை அகற்றுவதற்கான சிகிச்கை முறை**

கால்நடைகளின் உடம்பில் விச பொருள்கள் ஒட்டியிருந்தால், கால்நடைகளை தண்ணீர் கொண்டு கழுவி விடலாம்.

எண்ணெய் வகை விசப் பொருள்களால் விசம் ஏற்பட்டிருந்தால் (கிரியோசொட் மற்றும் சம்ப் எண்ணெய்), கால்நடைகளை சமையல் எண்ணெய் அல்லது பாரபின் கொண்டு கழுவலாம். கிருமி நாசினி யால் விசம் ஏற்பட்டிருந்தால், சுடு தண்ணீரைக் கொண்டு கழுவ வேண்டும். சோப்பை பயன்படுத்தக்கூடாது, ஏனென்றால் சோப்பு தோல் வழியாக விசம் உறிஞ்சுவதை அதிகப்படுத்தி விடும். திட எண்ணெய் வகை பொருட்களால் (தார்) விசத்தாக்கம் ஏற்பட்டிருந் தால், உடம்பில் பாதிக்கப்பட்ட இடத்திலுள்ள உரோமங்களை வெட்டி விட்டு, வெண்ணெய், சமையல் எண்ணெய் வகைகள் மற்றும் பாரபின் முதலியவற்றை அந்த இடத்தில் தடவலாம். பின்பு தண்ணீர் கொண்டு கழுவிவிவேண்டும்.

தகவல் : **முனைவர் ந.ராணி, முனைவர் கு.பொன்னுதுரை, முனைவர் பெ.அன்பரசி மற்றும் முனைவர் க.செந்தில்வேல், கால்நடை ஒட்டுண்ணியல் துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், உடுமலைப்பேட்டை.**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# கார்த்திகை பட்ட நிலக்கடலை பயிரில் இரகங்கள் தேர்வும், விதைப்பரிசோதனையின் அவசியமும்

தஞ்சாவூர், நவ,26

தஞ்சாவூர் மாவட்ட புது ஆற்றுப் பாசனப் பகுதிகளான, தஞ்சாவூர், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, திருவோணம், மதுக்கூர், பேராவூரணி, மன்னார்குடி வட்டாரங்களில் கார்த்திகை பட்டத்தில் முக்கிய எண்ணெய் வித்து பயிரான நிலக்கடலை பயிர் அதிகப் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. நிலக்கடலை பயிர் குறுகிய காலத்தில் விளைச்சலுடன் கூடிய கூடுதல் வருமானத்தை ஈட்டித் தருவதால் இப்பகுதி விவசாயிகளிடையே முக்கியத்துவம் வாய்ந்த பயிராக கருதப்படுகிறது.

எனவே விவசாயிகள் இப்பட்டத்திற்கு உகந்த தரமான விதை இரகங்களைத் தேர்ந்தெடுத்து விதைப்பதால் கூடுதல் மகசூல் பெறுவதுடன் நல்ல இலாபமும் ஈட்ட முடியும். நிலக்கடலை பயிரில் வீ.ஆர்.ஐ 10, ஜிஜேஜி 32, ஜிஜி 34, டி.எம்.வி.13, தரணி, கதிரி 1812, BSR 2 ஆகிய இரகங்கள் இப்பகுதிகளில் பெரும்பாலாக சாகுபடி செய்யப்படுகிறது. எனவே நல்ல மகசூலுக்கு பயிர் சாகுபடி பருவம், பருவத்திற்கேற்ற விதை இரகத்தேர்வு மற்றும் விதைத்தரம் ஆகிய மூன்றும் கவனிக்க வேண்டிய அம்சங்களாகும். தரமான விதைகளைப் பொறுத்த வரை குறைந்த பட்ச முளைப்புத்திறன் சரியான ஈரப்பதம், புறத்தூய்மை மற்றும் இனத்தூய்மை அவசியம் இருத்தல் வேண்டும். தரமான விதைகளை தேர்வு செய்து விதைப்பு மேற்கொள்ளும் போது விதைக்கான செலவை குறைத்து பரிந் துரைக்கப்பட்ட விதையளவை பயன்படுத்துவதுடன், வயலில் உகந்த பயிர் எண்ணிக்கை, பூச்சி மற்றும் நோயிலிருந்து பயிர் பாதுகாப்பு, அதிக மகசூலுடன் கூடிய இலாபம் விவசாயிகள் பெறமுடியும். தற்சமயம் டெல்டா பகுதிகளில் வடகிழக்கு பருவ மழை பெய்து வருவதால், விவசாயிகள் மற்றும் விதை உற்பத்தியாளர்கள் தாங்கள் சாகுபடி செய்ய உள்ள கார்த்திகைப்பட்ட உளுந்து மற்றும் நிலக்கடலை பயிரில் சரியான விதை இரகங்களை தேர்வு செய்து விதை முளைப்புத்திறன் மற்றும் ஈரப்பதம் பரிசோதனை செய்து விதைப்பு செய்வது மிகவும் இன்றியமையாததாகும்.

மேலும் நிலக்கடலை பயிர் ஒரு எண்ணெய்வித்து பயிர் என்பதால், நீண்டகால விதை சேமிப்பில், அதன் முளைப்புத்திறன் பாதிக்கும் நிலை ஏற்படலாம். நிலக்கடலை பயிருக்கு குறைந்தபட்ச முளைப்புத் திறன் 70 சதவீதம் மற்றும் ஈரப்பதம் 9 சதவீதமும் இருத்தல் வேண்டும். முளைப்புத்திறன் மற்றும் ஈரப்பதம் அறிந்து கொள்ள தங்கள் கைவசமுள்ள விதைகளில் உள்ள விதைகளில் பணி விதை

மாதிரிகளாக நிலக்கடலைக்கு 1 கிலோ வீதம் விதைமாதிரி எடுத்து தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகள் தஞ்சாவூர் காட்டுத்தோட்டத்தில் அமைந்துள்ள விதைப்பரிசோதனை நிலையத்திலும். திருவாரூர் மாவட்ட விவசாயிகள், திருவாரூர், விஜயபுரம், பெரிய மில் தெருவில் அமைந்துள்ள விதைப்பரிசோதனை நிலையத்திலும் நாகப் பட்டினம் மாவட்ட விவசாயிகள் நாகப்பட்டினம், வெளிப்பாளையம், 15 காளியம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள விதைப் பரிசோதனை நிலையத்திலும் தங்கள் முழு முகவரியுடன், விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80/– பகுப்பாய்வு கட்டணமாக செலுத்தி முளைப்புத்திறன் பரிசோதனை முடிவுகளை தெரிந்து கொள்ளலாம்.

பொதுவாக விவசாயிகள் விதை விற்பனையாளர்களிடம் விதைகளை வாங்கும்பொழுது தமிழ்நாடு விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறை மூலம் சான்றளிக்கப்பட்டு உள்ளதை உறுதி செய்து கொண்டு விதையின் காலக்கெடு வினையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தஞ்சாவூர் சரக விதைப்பரிசோதனை அலுவலர் D.சிவ வீரபாண்டியன் கேட்டுக் கொண்டுள்ளார்.



# நீர்நிலையில் ஆக்கிரமித்த சம்பை செடிகளை அகற்றுவது எப்படி?



சம்பை செடி பொதுவாக நீர் ஓடைகள் மற்றும் நீர்நிலைகளில் வளரக்கூடிய ஒரு நீர்த்தாவரம். இதனை 'சம்பு 'சன்பு ' கன்பு என்று பல்வேறுபட்ட பெயரில் அழைக்கப் படுகின்ற களைச் செடியாகும். ஒரு பார்வைக்கு நாணல் புல் மாதிரி இருந்தாலும் இதனுடைய வேர்கள் மட்ட நிலத்தண்டு வேர்களை கொண்டது. இதனை ஆங்கிலத்தில் (NARROW LEAF CATTAIL) என்றும் அழைக்கப் படுகின்றன. இதனுடைய அறிவியல் பெயர் (TYPHA ANGUSTIFOLIA) இது TYPHACEAE தாவரக் குடும்பத்தை சார்ந்தது.

## வளரியல்பு

இத்தாவரம் நீண்ட புல் போன்ற காணபட்டாலும் இதனுடைய இலைகள் தட்டையானவை, அகலத்தில் மிகவும் குறுகியது. தண்டுகளின் உச்சியில் பரந்த உட்பகுதியை கொண்ட பழப்பு நிற கம்பங்கதிர்கள் போன்று கதிர்கள் வெளிவரும். இதனுடைய விதைகள் மிகவும் மெல்லியதாகவும் எளிதில் காற்று மூலமாக பரவக்கூடியதாகவும் உள்ளது. இந்த தாவரமானது ஐரோப்பா–விலிருந்து கடலோரமாக மற்ற நாடுகளுக்கு பல நூற்றாண்டு களுக்கு முன்னதாக வந்ததாக தெரிகிறது. நம்முடைய சங்க இலக்கியங்களில் கூட, சிறு குழந்தைகள் இதனுடைய காம்புகளை (நீண்ட தண்டுகளை) எடுத்துமார்பில் அடித்துக் கொண்டு விளையாடியதாக பெரும் பாணாற்றுபடை' என்ற சங்க இலக்கியம் கூறுகிறது.

## இதனுடைய பயன்கள்

இதன் நீண்ட இலை தான் சம்பு (சம்பை) எனப்படும். இதனை கொண்டு தட்டிகள் மற்றும் பந்தி பாய்கள் பின்னி நம்முடைய முன்னோர்கள் பயன்படுத்தி வந்தனர். இத்தாவரத்தின் வேர்பகுதி கிழங்கில் அதிகமாக மாவு சத்துகள் இருப்பதால் ஒரு சில இடங்களில் உணவாக பயன்படுத்தி வருகின்றனர். இதனுடைய உண்ணக்கூடிய தண்டுகளை வியட்நாம் நாட்டில் 'பான்பான்' என்று அழைத்ததாக தகவல் உள்ளது.

## இதனை ஏன் அழிக்க வேண்டும்? எப்படி அழிப்பது?

இந்த செடிகள் கூட்டமாக கூட்டமாக புதர்போல மண்டி கிடப்பதால் விச சந்துகள் கூட்டமாக வாழும் அத்துடன் அல்லாமல் வயல்களில் நெற்கதிரை சேதப்படும் காட்டு பன்றிகள் மறைந்து தங்குவதற்கு ஏற்ற இடமாக உள்ளது. இதனால் விவசாயம் பலத்த சேதார மடைய வாய்ப்புள்ளது. இதனுடைய பூக்களில் இருந்த மகரந்த தூள் காற்றிலே பறந்து வாகன ஓட்டிகளின் கண்களை பதம் பார்க்கும். இதனால் நீர் வழி தடங்கள் அடைக்கப்பட்டு வரத்து கால்வாய்கள் புதர் மண்டிய நிலையில் மாறும். எனவே இதனை அழிக்க வேண்டும்.




## அழிப்பது எப்படி?

1) கோடையில் இது காய்ந்துபோன நிலையில் இதனுடைய கிழங்கினை தோண்டி எடுக்க வேண்டும்.

2) நீர்நிலைகள் தூர்வாரும் போது ஜே.சி.பி இயந்திரங்களை கொண்டு அடியோடு தோண்டி அப்புறப்படுத்த வேண்டும்.

3) 100 நாட்கள் வேலைத்திட்ட பணியாளர்களைக் கொண்டு அவ்வப்போது அப்புறப்படுத்த வேண்டும்.

4) கடைசி கட்டமாக களைக்கொல்லியை உபயோகிக்கலாம். கிளைபோசேட் என்ற ரவுண்டப் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 முதல் 10 மிலி கலந்து தெளிக்கலாம். இக்கலவையில் ஒரு லிட்டருக்கு 10 கிராம் அம்மோனியம் சல்பேட் கலப்பதுடன் 1 மிலி டிபாலையும் கலந்து தெளிக்கலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# இப்கோ நானோ உரங்கள் விழிப்புணர்வு கருத்தரங்கம்

திருச்சி, நவ.26

திருச்சி, மேட்டூர் கிராமத்தில் நானோ உரங்கள் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், இப்கோ கள அதிகாரி பொம்மண்ணன் நானோ யூரியா, நானோ டி.ஏ.பி மற்றும் சாகரிகா திரவ உரங்களை பயன்படுத்தும் முறை மட்டும் நன்மைகள் பற்றி விளக்கினார். அவர், நெற்பயிரில் விதை/நாற்று நேர்த்தி செய்ய நானோ டி.ஏ.பியை ஒரு லிட்டர் நீருக்கு 5 மி.லி. அளவில் கலந்து விதை/நாற்றை நனைத்து உலர்த்தி நடவு செய்யுமாறு கூறினார். நாற்று நேர்த்தி செய்வதனால் பயிரின் வளர்ச்சி சீராகவும், அதிகப்படியான தூர் வளர்ச்சி காணப்படும் என்றார்.

மேலும், இலைவழி தெளிப்பில் ஒரு ஏக்கருக்கு 500 மி.லி. நானோ யூரியா மற்றும் 500 மி.லி. நானோ டி.ஏ.பி கலந்து நடவு செய்த 30-35 நாட்களில் முதல் தெளிப்பாகவும், பின்னர் நடவு செய்த 45-50 நாட்களில் இரண்டாம் தெளிப்பாகவும் தெளிக்க வேண்டும் என்றார்.

நானோ உரங்கள் பயன்படுத்துவதால், இரசாயன உரங்களின் பயன்பாட்டால் ஏற்படும் மண் மற்றும்சுற்றுசூழல் மாசுபாட்டை தவிர்க்கலாம் என்று தெரிவித்தார்.

மேலும், நானோ உரங்களுடன் பிற வேளாண் பூச்சிக்கொல்லி மருந்துகளும் கலந்து தெளிப்பதனால் இடுபொருள் செலவு குறையும் என்றும் கூறினார்.



# மக்காச்சோளம் மற்றும் பருத்தி பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்ய 30ம் தேதி கடைசி நாள்

விருதுநகர், நவ.26

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டாரத்தில் ராபி பருவத்தில் பயிர் செய்யப்பட்டுள்ள மக்காச்சோளம் மற்றும் பருத்தி பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்ய கடைசி நாள் 30.11.24 ஆகும். பயிர் காப்பீடு கட்டணம் ஏக்கருக்கு மக்காச்சோளம் பயிருக்கு ரூ.316/- எனவும், பருத்தி பயிருக்கு ரூ.441/- எனவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.



எனவே, விவசாயிகள் கடைசி நேர தாமதத்தை தவிர்த்து உடனடியாக மக்காச்சோளம் மற்றும் பருத்தி பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்து பயன் பெறுமாறு சிவகாசி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ப.சுந்தரவள்ளி கேட்டுக் கொள்கிறார்கள்.

விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும் போது முன் மொழிவு விண்ணப்பத்துடன், பதிவு விண்ணப்பம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் அடங்கல் /விதைப்பு அறிக்கை, வங்கிக் கணக்கு புத்தகத்தின் (Bank Pass Book) முதல் பக்க நகல், ஆதார் அட்டை (Aadhar Card) நகல் ஆகியவற்றை இணைத்து, கட்டணத் தொகையை செலுத்திய பின் அதற்கான இரசீதையும் பொதுச் சேவை மையங்கள் / தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள், வங்கிகளில் பெற்றுக் கொள்ளலாம் என சிவகாசி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

# சிறுதானிய விழிப்புணர்வு நிகழ்ச்சியை மேற்கொண்ட வேளாண் கல்லூரி மாணவிகள்



மதுரை, நவ.26

மதுரை சொக்கிகுளத்தில் உள்ள வாப்ஸ் நிறுவனத்தில், சிறுதானிய விழிப்புணர்வு நிகழ்ச்சியை, விருதுநகர் மாவட்டம், ஸ்ரீ வில்லிபுத்தூர் கலசலிங்கம் வேளாண்மை மற்றும் தோட்டக் கலை கல்லூரி இளங்கலை வேளாண்மை இறுதி ஆண்டு பயிலும் மாணவிகளான தயா ஹரிணி, சோபிகா, தங்க புஷ்பம், சயனா.க.சலீம், சந்தியா பூரணி, சூர்யா, மாரிசெல்வி, கிருஷ்ண வேணி, சுஷ்மா ஆகியோர் கிராமப்புற வேளாண்மை பணி அனுபவத் திட்டத்தின் கீழ் சிறுதானியங்களின் வகைகள், பயன்கள் மற்றும் அவற்றை கொண்டு தயாரிக்கப்படும் உணவுப் பொருட்கள், சிறுதானியத்தை வைத்து செய்யப்படும் தொழில்கள் குறித்தும் வாப்ஸ் நிறுவனத்தின் பெண் பயிற்சியாளர்களுக்கு விளக்கம் அளித்தனர். வெற்றி பெற்ற பெண் தொழிலதிபர் களின் வாழ்க்கைப் பயணம் குறித்தும் விவரித்து ஊக்க மளித்தனர்.

இந்நிகழ்வு ஒருங்கிணைப்பாளர் முனைவர் ம.ஜெயந்தி, குழு ஆலோசகர் முனைவர் ஜெ.ஜெயபிரபா ஆகியோரின் வழிகாட்டுதலின்படி நடைபெற்றது.


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# பவானி வட்டாரத்தில் புதுக்கோட்டை ஸ்டாமின் இயக்குநர் சங்கரலிங்கம் ஆய்வு



ஈரோடு, நவ.26

புதுக்கோட்டை மாவட்டம், ஸ்டாமின் இயக்குநர், முனைவர் ப.சங்கரலிங்கம், ஈரோடு மாவட்டம், பவானி வட்டாரத்தில் செயல்பட்டு வரும் உயிர்உர உற்பத்தி மையம், உயிரியல் கட்டுப்பாட்டு மற்றும் மாநில அரசு விதைப்பண்ணை அலுவலங்களை ஆய்வு செய்ததோடு அவற்றின் இலக்கு மற்றும் சாதனை விபரங்களை கேட்டறிந்தார். அலுவலக பதிவேடுகளை முறையாக பாராமரிப்பது குறித்தும் அறிவுரை வழங்கினார்.






பிறகு பருவாச்சி கிராமத்தில் அமைக்கப்பட்டிருந்த துவரை கோ-8 விதைப்பண்ணை, புன்னம் கிராமத்தில் SWMA திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நீர் தேக்கத்தொட்டி, பைப்லைன், மின் மோட்டார்கள், மைலம்பாடி கிராமத்தில் மானிய விலையில் வழங்கப்பட்ட ரோட்டவேட்டர் ஆகியவற்றை ஆய்வு செய்து சம்பந்தப்பட்ட விவசாயிகளிடம் துறையின் சார்பில் வழங்கப்பட்ட மானிய விபரங்கள் மற்றும் திட்டங்களின் மூலம் பெற்ற பலன்கள் குறித்து கேட்டறிந்தார்.

ஆய்வின் போது சீனிவாசன், வேளாண்மை துணை இயக்குநர், ஈரோடு, கலைச்செல்வி, வேளாண்மை உதவி இயக்குநர் (வே.து.இ (பொ), ஈரோடு, ம.கனிமொழி, வேளாண்மை உதவி இயக்குநர், பவானி மற்றும் வேளாண்மை அலுவலர்கள், உதவி விதை அலுவலர்கள், வேளாண்மை உதவி அலுவலர்கள் உடன் இருந்தார்.

# கிராம முன்னேற்ற குழு கூட்டம் நடைபெற்றது



திருச்சி, நவ.26

திருச்சி மாவட்டம், மண்ணணச்ச நல்லூர் வட்டாரம், வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமையின் மூலம் 24-25 நிதி ஆண்டில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பூனாம்பாளையம் கிராமத்தில் கிராம முன்னேற்ற குழு கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் உதவி தொழில் நுட்ப மேலாளர் சிந்தியா வரவேற்புரை ஆற்றினார். மண்ணணச்சநல்லூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் செல்வராணி தலைமை வகித்து திட்ட விளக்க உரை ஆற்றினார். மேலும் ராபி முன் பருவ பயிற்சியினை வழங்கினார். விதை சான்று மற்றும் விதை பண்ணை அமைப்பது குறித்து உதவி விதை அலுவலர் துரை சங்கர் எடுத்துக் கூறினார். வேளாண்மை உதவி அலுவலர் பார்த்திபன் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்படும் இடுப்பொருட்கள் தார்பாய், பண்ணை உபகரணங்கள் தொகுப்பு பேட்டரி தெளிப் பான் மானியங்கள் குறித்து உரை ஆற்றினார். விதை இருப்பு மற்றும் விதைப்பு முறைகளை பற்றி கூறினார். தோட்டக்கலை அலுவலர் அகிலா காய்கறி பயிரில் பயிர் பாதுகாப்பு பற்றியும் தோட்டக்கலை துறையில் செயல்படும் முக்கிய திட்டங்கள் பற்றி எடுத்துக் கூறினார். நுண்ணீர் பாசனம், பழக்கன்றுகள், காளான் வளர்ப்பு திட்டத்தின் மானியத்தை எடுத்துக் கூறினார். இறுதியில் உதவி தொழில் நுட்ப மேலாளர் ஹர்ஷினி நன்றி உரை கூறினார்.

# இயற்கை விவசாயம் குறித்து பயிற்சியளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்

நாகப்பட்டினம், நவ.26

காரைக்கால், பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த 4ம் ஆண்டு மாணவர்கள் ஊரக வேளாண் பணி அனுபவப் பயிற்சியின் (கீழ்வேளூர் மற்றும் நெம்மேலி குழு) போது திருக்கண்ணக்குடி,

நாகப்பட்டினம் பகுதியில் 19/11/24 அன்று விவசாயிகளுக்கான கற்பித்தல் வகுப்பை நடத்தினர்.



இந்த வகுப்பில் மாணவர்கள் இயற்கை சார்ந்த விவசாயம் மற்றும் ஐந்திலை கரைசல் பற்றியும் பச்சை மிளகாய், இஞ்சி, பூண்டு கொண்டு தயாரித்த பூச்சி விரட்டியும் விவசாயி களுக்கு செய்முறையாக செய்து காட்டினர். மேலும் அசோலா வளர்ப்பின் முக்கியத்துவத்தையும், உயிர் உரங்களின் முக்கியத் துவத்தையும் விவசாயிகளுக்கு எடுத்து கூறினர். விவசாயி ஒருவர் நெல் வயலில் அசோலா வளர்ப்பு முறையை எடுத்து கூறினர். மேலும் இப்பயிற்சியில் பண்ணை அறிவியல் நிலை யத்தின் பூச்சியியல் துறை பாட பொருள் வல்லுனர் முனைவர் கே.சந்திரசேகர் மற்றும் நாகப்பட்டினம் வேளாண்மை அலுவலர் அரவிந்தன், துணை வேளாண்மை அலுவலர் பழனிச்சாமி கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சி திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் எஸ் பார்த்தசாரதி மற்றும் திட்ட அதிகாரி முனைவர் எஸ்.மாலா இவர்களின் வழிகாட்டுதலின் கீழ் நடைபெற்றது.



# TNAU திரவ மக்காச்சோள மேக்சிம்

இது மக்காச்சோளத்திற்கு ட்ரோன் மூலம் தெளிப்பதற்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த திரவம்.




**பயன்படுத்தும் முறை**

அளவு : 1 லிட்டர் / ஏக்கர்

தெளிப்பு திரவம் : 20 லிட்டர் / ஏக்கர்

தெளிக்கும் பருவம் : பூக்கும் பருவம் (1 லிட்டர் / ஏக்கர்) மற்றும் மணி பிடிக்கும் பருவம் (1 லிட்டர் / ஏக்கர்)

- ஏக்கருக்கு ஒரு லிட்டர் அடர் TNAU திரவ மக்காச்சோள மேக்சிமை 19 லிட்டர் நீரில் கலந்து ஒட்டும் திரவம் (20 மி.லி.) சேர்த்து ட்ரோன் மூலம் தெளிக்க வேண்டும்.

**பயன்கள்**




- மணி பிடிக்கும் திறன் அதிகரிக்கும்.
- விளைச்சல் 20 சதம் வரை கூடும்.
- வறட்சியைத் தாங்கும் தன்மை அதிகரிக்கும்.
- ஊட்டச்சத்துக்களை உட்கிரகிக்கும் திறன் அதிகரிக்கும்.

விலை : ரூ.545 / லிட்டர் (மூன்று மாதத்திற்குள் பயன் படுத்தவும் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை அலுவலர் த.நிவேதாஸ்ரீ விவசாயிகளை கேட்டுக் கொண்டு உள்ளார்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பாசன நீரின் தர நிலைகள்

தாவரங்களின் சிறந்த வளர்ச்சிக்கும், சிறந்த விளைச்சலைப் பெறுவதற்கும் தரமான நீர்ப்பாசன நீர் இன்றியமையாத ஆதாரமாகும். விவசாயத்தில், பாசனத்திற்கு கிடைக்கும் நீரின் அளவை விட பாசன நீரின் தரம் தாவர வளர்ச்சி மற்றும் மண் வளத்தை தீர்மானிக்கும் முக்கிய காரணியாகும்.

பாசன நீரை மதிப்பிடுவதற்கான அளவுகோல்கள்

**1. உப்புத்தன்மை ஆபத்து அல்லது மொத்த கரையக்கூடிய உப்பு செறிவு**

| EC at 25°C (dS $m^{-1}$) | உப்புத்தன்மை வகுப்பு | கருத்துக்கள் |
|---|---|---|
| < 0.25 | C1 | குறைந்த உப்புத்தன்மை கொண்ட நீர்–பயன்படுத்தலாம் |
| 0.25-0.75 | C2 | மிதமான உப்புத்தன்மை கொண்ட நீர் மிதமான உப்பை தாங்கும் பயிர்களை பயிரிடலாம். |
| 0.75-2.25 | C3 | அதிக உப்புத்தன்மை கொண்ட நீர்–நல்ல உப்பை தாங்கும் பயிர்களை பயிரிடலாம். |
| >2.25 | C4 | மிக அதிக உப்புத்தன்மை கொண்ட நீர் – சாதாரண நிலைமைகளின் கீழ் பாசனத்திற்கு பொருந்தாது. உப்பை தாங்கும் பயிர்களை பயிரிடலாம். |

**2. மொத்த கரைந்த திடப்பொருள்கள் (TDS)**

| மொத்த கரைந்த திடப்பொருள்கள் (TDS )ppm | உப்புத்தன்மை ஆபத்து |
|---|---|
| < 160 | மிகக் குறைந்த ஆபத்து. தாவரங்களுக்கு தீங்கு விளைவிப்பதில்லை |
| 160-480 | குறைந்த ஆபத்து. உணர்திறன் தாவரங்கள் அழுத்தத்தைக் காட்டலாம். மிதமான கசிவு மண்ணில் உப்பு சேர்வதை தடுக்கிறது |
| 480-1280 | நடுத்தர ஆபத்து. கவனமான நீர்ப்பாசனம், நல்ல வடிகால் மற்றும் கசிவு வசதியுடன் உப்பு தாங்கும் தாவரங்களை பயிரிடலாம் |

| | |
|---|---|
| 1280-1920 | நடுத்தர உயர் ஆபத்து. பயிர்களை வளர்க்க கவனமாக மேலாண்மை தேவை |
| >1920 | அதிக ஆபத்து. தீவிர மேலாண்மை தேவை |

**3. சோடிசிட்டி ஆபத்து**

| SAR மதிப்பு | கருத்துக்கள் |
|---|---|
| 0 -10 | சிறிய அல்லது ஆபத்து இல்லை |
| 10-18 | குறிப்பிடத்தக்க ஆபத்து, ஆனால் சரியான நிர்வாகத்துடன் பயன்படுத்தலாம் |
| 18-26> 26 | பெரும்பாலான பயிர்களுக்கு திருப்தியற்றது |

**4. காரத்தன்மை ஆபத்து**

எஞ்சிய சோடியம் கார்பனேட் (RSC) மற்றும் பைகார்பனேட் (RSBC)

| RSC மதிப்பு ($meL^{-1}$) | RSBC மதிப்பு ($meL^{-1}$) | நீர் தரம் |
|---|---|---|
| < 1.25 | < 3 | தண்ணீரை பாதுகாப்பாக பயன்படுத்தலாம் |
| 1.25-2.5 | 3-9 | குறிப்பிட்ட நிர்வாகத்துடன் தண்ணீரைப் பயன்படுத்தலாம் |
| >2.5 | >9 | நீர்ப்பாசன நோக்கங்களுக்காக பொருத்தமற்றது |

**5. குறிப்பிட்ட அயனி நச்சுத்தன்மை**

**அ. குளோரைடு**

| குளோரைடு ) செறிவு (m.e/L | நீர் தரம் |
|---|---|
| <4 | சிறப்பானது |
| 4-7 | மிதமாக நல்லது |
| 7-12 | சற்று ஏற்றது |
| >12 | நீர்ப்பாசன நோக்கங்களுக்காக ஏற்றது அல்ல |

**ஆ. கந்தகம் ($meL^{-1}$)**

| | |
|---|---|
| < 4 meq L-1 | : சிறப்பானது |
| 4-12 meq L-1 | : மிதமாக நல்லது |
| > 12 meq L-1 | : அதிருப்திகரமானது |

**இ. போரான்**

| போரான் செறிவு (ppm) உணர்திறன் குறைவாக பயிர்கள் | தாங்கும் பயிர்கள் | தாங்கும் பயிர்கள் | குறிப்புகள் |
|---|---|---|---|
| <0.33 | <0.67 | <1.00 | பாதுகாப்பாகப் பயன்படுத்தலாம் |
| 0.33-0.67 | 0.67-1.33 | 1.00-2.00 | நிர்வாகத்துடன் பயன்படுத்தலாம் |

| | | | |
|---|---|---|---|
| 0.67-1.00 | 1.33-2.00 | 2.00-3.00 | நீர்ப்பாசன |
| 1.00-1.25 | 2.00-2.50 | 3.00-3.75 | நோக்கத்திற்காக |
| >1.25 | >2.50 | >3.75 | பொருந்தாது |

**ஈ. புளோரின்**

<1 ppm = நல்லது, >1 ppm = சிக்கல்

தகவல் : **Glory K.S & A.Priyadharshini, Assistant Professors, Krishna College of Agriculture and Technology, Srirengapuram, Madurai. 93441 88094.**

